PEOPLE'S BANK

Pride of the Nation

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## மக்கள் வங்கி தலைமை அலுவலக உணவகத்தை நடாத்துதல்
## கேள்விப்பத்திர இலக்கம் P/023/2023

கொழும்பு 02, சர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, 75ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தின் உணவகத்திற்காக 2023.07.01ஆம் திகதி முதல் 2026.06.30ஆம் திகதி வரை மூன்று வருட காலப்பகுதிக்கு உணவு பானங்களை வழங்கும் பொருட்டு உணவு வழங்கல் தொடர்பாக அனுபவம்வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றது.

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2023.05.29ஆம் திகதி முதல் 2023.06.09ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக 1,500/- ரூபா மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் வேண்டும்.

2. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் ரூபா 50,000/- பெறுமதிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து (மக்கள் வங்கியைத் தவிர்த்து) பெற்றுக் கொண்ட வங்கி பிணைப்பொறுப்பு முறியொன்றை அல்லது முறியொன்றை அல்லது வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கின்ற பிணைப்பொறுப்பு முறி அல்லது முறி அல்லது கொடுப்பனவு கட்டளை அல்லது வங்கி வரைவு கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதியான 2023.06.12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் திறக்கப்படுவதோடு அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் 2023.06.12ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அந் நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது கேள்விப்பத்திரத்தை இரத்துச்செய்யும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.


**முகாமையாளர் (வழங்கல்)**<br>
**வழங்கல் திணைக்களம்,**<br>
**மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம்**<br>
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577, 2439578**<br>
**தொலைநகல் இலக்கம் : 2439576,**<br>
**இணையத்தளம் : www.peoplesbank.lk**<br>
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk**